ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-45

12. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் உரையில் மொத்த கார்டுகளின் எண்ணிக்கை 2.01 கோடி என்று உள்ளது. ஆனால், உண்மையில் இருந்த கார்டுகள் 2,01,91,100 என்பது round off செய்யும்போது 2.019 கோடி எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். 2.01 கோடி எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், பயனில் இருந்த கார்டுகள் 2,01,91,100 என்ற அடிப்படையில் அரசாணை ரூ.1,000/- வீதம் வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் துணை மதிப்பீடுகளில் 2019.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த ஒதுக்கீட்டில் எந்தவித தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முனைவர் பொன்முடி அவர்களும் உரிய நேரத்தில் இதனைச் சொன்னதால் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

13. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முனைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. 2019-ன் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான முக்கிய நிகழ்வினை அமைப்பதற்கு நிகழ்ச்சி பங்குதாரராக திருவாளர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பை (CII) தேர்வு செய்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையின் 30-8-2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 289-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. சென்னையில், அரசு-தனியார் பங்களிப்பில் கழிவிலிருந்து எரிசக்தி தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு தொழில்நுட்ப உதவி மற்றும் திறம்பட்ட ஆலோசனை சேவைகள் வழங்க பன்னாட்டு நிதி கழகத்தின்